புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியங்களில் உணவு உற்பத்தியும் பாதீடும்

முனைவர் ஐ.க.விஜி,
உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான்கடை.

ஆய்வுச் சுருக்கம்

சங்க கால சமூக அமைப்பின் கட்டமைப்பிற்கு, அச்சமூகத்தின் உணவு உற்பத்தி முறையும் அன்றைய இனக்குழு வாழ்க்கை முறையும் பெரும் பங்காற்றியிருக்கிறது. கூட்டு வாழ்க்கை முறையும் உணவும் பகிர்வும் மிக நெருக்கமானவை. சமூகத்தின் ஒழுங்கையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பவை. பொருளாதாரப் பெருக்கத்திற்கு உதவுபவை. இவ்வாறு இனக்குழு வாழ்க்கை முறையில் இருந்து உருவான இலக்கியங்களாக நாம் சங்கப்பாடல்களைக் கூற முடியும். சங்க இலக்கியங்களில் இனக்குழு வாழ்வின் முக்கியப் பண்புகளான உணவு உற்பத்தியும் பாதீடும் பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. இதனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொல்

இனக்குழூச் சமூகம், வேட்டையும் பாதீடும், சேகரிப்பும் பாதீடும், வன்புல வேளாண் உற்பத்தியும் பாதீடும் ஆகியவை திறவுச் சொல்லாக அமையப்பெற்றுள்ளன.

முன்னுரை

சங்க கால அரசியல், பண்பாடு, சமூகச் சூழல், பொருளாதாரம் இவற்றை ஆய்வு செய்து வரையறுப்பதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் இதற்கு ஓரளவு உதவினாலும், பெரும்பாலும் இவ்வாய்விற்காக இலக்கியங்களையே நாம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இலக்கியங்களையும் நாம் ஒரு எல்லை வரையே சான்றுகளாகக் கொள்ள முடியும். இலக்கியங்களின் புனைவியல் தன்மையும், நெகிழ்ச்சி கொண்ட போக்குகளும் உண்மைகளுக்கு முழுமையான இடந்தராதவை. இச்சூழலில் சங்க இலக்கியங்களைப் பிற அறிவுத்துறைகளோடு ஒப்பிட வேண்டிய தேவை எழுகிறது. மொழியியல், மானிடவியல், உளவியல், சூழலியல் போன்ற துறைகளின் ஒப்பீட்டால் மட்டுமே சங்க காலச் சமூக அமைப்பினைப் பற்றிய ஓரளவான உண்மைகளை அறிய இயலும். அவ்வகையில் மானிடவியல் துறையானது. கொண்டு சங்க இலக்கியங்களை ஆய்வு செய்யும் போக்கு இன்று அதிகரித்து வருகிறது. மானிடவியல் துறை சமூகவியல் ஆய்வுகளின் முடிவுகளை உள்வாங்கி உருப்பெற்ற அறிவியல் சார்ந்;த கோட்பாடாக இருப்பதால் சங்க இலக்கியங்களை இதன்வழி ஆய்வு செய்யும் போது புதிய திறப்புகளை இனங்காண முடிகிறது. சங்க கால சமூக அமைப்பின் கட்டமைப்பிற்கு, அச்சமூகத்தின் உணவு உற்பத்தி முறையும் அன்றைய இனக்குழு வாழ்க்கை முறையும் பெரும் பங்காற்றியிருக்கிறது. கூட்டு வாழ்க்கை முறையும் உணவும் பகிர்வும் மிக நெருக்கமானவை. சமூகத்தின் ஒழுங்கையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பவை. பொருளாதாரப் பெருக்கத்திற்கு உதவுபவை. இவ்வாறு இனக்குழு வாழ்க்கை முறையில் இருந்து உருவான இலக்கியங்களாக நாம் சங்கப்பாடல்களைக் கூற முடியும். சங்க இலக்கியங்களில் இனக்குழு வாழ்வின் முக்கியப் பண்புகளான உணவு உற்பத்தியும் பாதீடும் பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. இதனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இனக்குழுச் சமூகம்

*சங்க கால சமூக அமைப்பு குறித்துப் பல்வேறு கருத்துக்கள் அறிஞர்களால் முன் வைக்கப்பட்டுள்ளன. அது ஓர் இனக்குழுச் சமூகம் என்றும் இனக்குழு அமைப்பிலிருந்து நிலவுடைமை முறைக்குக் கடந்து செல்லும் நிலையிலிருந்த சமூக அமைப்பு என்றும் பரவலாக நம்பப்படுகின்றது என்கிறார் பேராசிரியர் ஸ்டீபன் (2017 : 50). இதையே பேராசிரியர் கா.ராஜன், பக்தவத்சல பாரதி, பெ. மாதையன் என இப்புலத்தில் ஆய்வு செய்த ஆய்வாளர்களும் கூறுகின்றார். சங்க இலக்கியங்களில் குறிப்பாகக் குறிஞ்சி மற்றும் முல்லைத்திணைப் பாடல்களில் இதற்கான சான்றுகளை நாம் இனங்காண முடியும். இனக்குழு எச்சங்களைத் தாங்கிய இத்திணைப் பாடல்களில் உணவு உற்பத்தி பெரும்பாலும் அச்சமூக அமைப்பைத் தீர்மானிக்கும் முதன்மைக் காரணியாக இருப்பதையும் நாம் காணமுடியும். குறிஞ்சி மற்றும் முல்லைத் திணைகளின் முதன்மையான உற்பத்தியாக வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலுமாக உள்ளது. இவ்விரு திணை மக்களின் உணவு உற்பத்தி பெரும்பாலும் இயற்கை சார்ந்ததாக அமைகிறது. (முல்லைத் திணையின் கால்நடை வளர்ப்பும் அது சார்ந்த உணவு உற்பத்தியும், இயற்கை சார்ந்ததாகவே அமைவதை நினைவில் கொள்ள வேண்டும்). இயற்கை சார்ந்த உணவு உற்பத்தி என்பது ஒருபடித்தானது அல்ல. அதில் சமச்சீரற்ற நிலை நிலவுவது இயல்பானது. இதனால் கூட்டுச் செயல்பாடு இச்சமூக வாழ்வில் தவிர்க்க இயலாத ஒன்றாகிவிடுகிறது. இனக்குழு வாழ்வின் முதன்மைச் செயல்பாடாக இக்கூட்டு வாழ்க்கை இருப்பதால் இப்பிணைப்பு இன்னும் வலுப்பெறுகிறது. உற்பத்தி உறவுகள் சார்ந்து இயங்குவது அச்சமூக வாழ்வின் அடையாளமாகவும் மாறிவிடுகிறது. இவ்வாறு இனக்குழு வாழ்க்கையின் உற்பத்தியும் அதன் வழியான பாதீடும் உளவியல் சார்ந்தும் அச்சமூகத்தினைப் பிணைத்துக் கொள்கின்றன. குறிப்பாகப் பாதீடு சமூகத்தின் கூட்டுழைப்பையும், கூட்டுப் பொருளாதாரத்தையும் நெறிப்படுத்தியது. இனக்குழு வாழ்வின் முக்கியத்துவம் இதன் வழியாக வெளிப்படுத்தப்பட்டது. இனக்குழு வாழ்க்கை முறையில் நிலவிய சமூகப் பொதுவுடையால் கிடைத்த உணவு முறையாகப் பாதீடு செய்யப்பட்டதைச் சங்கப் பாடல்கள் பலவற்றிலும் காணமுடிகிறது. வேட்டையின் மூலம் பெறப்பட்ட உணவு வகைகளே பெரும்பாலும் பாதீடு செய்யப்பட்டாலும் வன்புல வேளாண் உற்பத்தியில் தருவித்த பொருள்களும் பாதீடு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இனக்குழு வாழ்வில் பாதீடு மிக முக்கியமானதாக இருந்து வந்திருக்கிறது.*

வேட்டையும் பாதீடும்

*இனக்குழுச் சமூகத்தில் வேட்டையாடி உணவு சேகரித்தலே முதன்மையான உணவாதாரமாக இருந்தது. இதற்குச் சமூகத்தின் கூட்டுழைப்பு அவசியமானதாகும். வேட்டையும், கூட்டுச் செயல்பாடும் சமூகத்தில் ஏற்படுத்திய அசைவியக்கங்களைப் படிமலர்ச்சிக் கோட்பாடு பேசுகின்றது. வேட்டையின் மூலம் பெறப்பட்ட உணவுகள் (இறைச்சி) பாதீடு செய்யப்பட்டன. இது சமூகத்தின் கூட்டு அறமாகக் கருதப்பட்டது. சங்க இலக்கியங்கள் இதனை அழகாகப் பதிவு செய்கின்றன. பல வகைப்பட்ட கருவிகளைக் கொண்டு பல்வகை விலங்கினங்கள் வேட்டையாடப்பட்டதை அவை பதிவு செய்கின்றன.*

*"கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பில்*
*நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென*
*அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்" (மலைபடு.302-304)*
*"வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது*
*படுமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்" (புறம். 326: 8-9)*
*"கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சி" (நற்.75: 6)*

*என்ற சங்கப்பாடல்கள் பாதீட்டைப்; பேசுகின்றன. இனக்குழுச் சமூகத்தில் சமூகப் பொதுவுடைமை அதிகமாகக் காணப்பட்டதால் கிடைத்த உணவைப் பாதீடு செய்து கொண்டனர். பண்டைய இனக்குழுச் சமூகத்தில் ஒரு படித்தான பாங்கும், சமூகச் சமவுடைமையும் மிகுந்திருந்ததால் அவர்களிடம் கூட்டுண்ணும் முறை இயல்பாக இருந்தது என்கிறார் பக்தவத்சலபாரதி (2021 : 40) எடுத்துக்காட்டாகப் பின்வரும் நற்றிணைப் பாடலைக் காணலாம்.*

*"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை*

தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு
காந்தனம் சிறுகுடிப் பகுக்கும்" (நற்.85:8-10)

கானவர்களின் வேட்டையில் விழுந்த முளவுமான் இறைச்சியைக் குறிஞ்சி நிலத் தலைவியான கொடிச்சி தம் குடிகள் கூட்டத்திற்குப் பங்கிட்டுக் கொடுத்தலை மேற்கண்ட நற்றிணைப் பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன. இதில் சமூகவுடைமையே மையமாக இருப்பதைக் காணமுடிகிறது. அதுவே அச்சமூகத்தின் அறமாகவும் இருக்கிறது. நிறுவனமயமாகியுள்ள சமூகத்தைத் தக்க வைக்கும் இன்றியமையாத ஒழுகலாறுகளில் இது முதன்மையானதாகும். குழுச் சமூகங்களில் நிலவிய இனக்குழு வாழ்விற்கு இன்றியமையாதது பாதீடு, பகிர்ந்துண்ணல் (Sharing of Food) என்ற வழக்கமாகும் என்று இதைக் குறிப்பிடுகிறார் ராஜ்கௌதமன் (2012 : 113).

பண்டைய இனக்குழு வாழ்வில் சமூகக் கடமையாக இருந்த இவ்வழக்கம் நிலக்கிழமை பூண்ட வேளாண் சமூக மாற்றத்தில் பயன்கருதி வழங்கி ஈகை, பரிசில் (தானம்) போன்ற சமூக அறமாக மாற்றப்பட்டு பிற்காலங்களில் போதிக்கவும் பட்டது. மன்னர், வேந்தர், குறுநில மன்னர்கள், சீறூர் மன்னர்கள் இவர்களைத் தேடி அலைந்த பாணர், புலவர், விறலியர் கூட்டம் அவர்களைப் புகழ்ந்த போது போர், வீரம் என்பவற்றுக்கு இணையாக 'ஈகை' முதன்மைப்படுத்தப்பட்டது. 'செல்வத்துப் பயனே ஈதல்', 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற முன்வைப்புகள் இதன் பொருட்டே எழுந்தன. மட்டுமின்றி 'ஓம்பா ஈகை', வரையா ஈகை என்று ஈகையின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு அது சமூக அறமாகக் கட்டமைக்கப்பட்டது. இதன் காரணமாக சங்க இலக்கியங்களின் மருதத்திணைப் பாடல்களில் ஈகையும் கொடையும் அதிகமாகப் பேசப்பட்டுள்ளன. புறத்திணையின் முக்கிய வெளிப்பாடாக இது வலியுறுத்தப்பட்டன.

"வேட்டைச் சமூகத்தில் பகுத்துண்ணுதல் கூட்டு வாழ்வின் விழுமியமாக (அறமாக) இருந்துள்ளது. இது ஓர் உலகளாவிய பண்பாகும். இது எல்லா வேட்டைச் சமூகங்களிலும் காணக் கூடியதாக உள்ளது" என்கிறார். மானிடவியல் ஆய்வாளர் பக்தவத்சல பாரதி (2021 : 41) சங்க அக இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லைத் திணைப் பாடல்களிலும் புறநானூற்றிலும் இதற்கான சான்றுகள் நிறையவே உள்ளன.

"முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் - ஆடவர்
உடும்பிழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீறில் முன்றில் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து" (புறம். 325 : 6-10)

வேட்டையில் கிடைத்த முள்ளம்பன்றியையும், உடும்பையும் முற்றத்திற்குக் கொண்டு வந்து அறுத்துக் கூறிட்டு ஊருக்குப் பகிர்ந்தளித்த செய்தி இப்பாடலில் பதிவாகியுள்ளது. வேட்டைச் சமூகத்தில் நிலவிய கூட்டு வாழ்க்கையும் பொதுவுடைமைப் பண்பும் அச்சமூகத்தின் அறமதிப்பீடுகளுக்கு நேர் செய்யும் பல காரணிகளை உருவாக்கித் தந்தன. அதில் பாதீடு என்பது மிக முக்கியமான அறச்செயல்பாடாக இருந்திருக்கிறது. நிலவுடைமைச் சமுதாயத்தில் இதுவே ஈகை அறமாகக் கருதப்பட்டது. பின்வரும் ராஜ்கௌதமன் குறிப்பிடும் கருத்து இதனை உறுதிப்படுத்தும்.

"வேடர்கள் ஆடிய வேட்டை விலங்குணவு வேடர் சமூகக் குழுக்களுக்குள்ளே 'கூறு' செய்து பகிர்ந்துண்ணப்பட்டது. வேடர்களின் இனக்குழுவுக்குள் இனக்கடமையாக இருந்த ஒரு வழக்கம், வேந்தரின் நிலக்கிழமை நாகரிகத்தில் பொருள் உள்ளவன் இல்லாதவனுக்கு வழங்கும் 'ஈகை'யாக மாற்றம் அடைந்தது" (2012 :101) என்கிறார். அவர் கருத்துப்படி இனக்குழு வாழ்க்கையின் வீரனே உடைமைச் சமூகத்தின் வேந்தனாகிறான். அங்கு காணப்பட்ட வேட்டைப் பண்பாட்டே நிலவுடமைச் சமூகத்தின் 'மறம்' அதாவது போர் அறமாகும்.

சங்க காலத்தில் ஆநிரை கவர்ந்து தம்குடிக்குள் பங்கிட்டுக் கொண்ட வேட்டுவர்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அதைப்போல வணிகக் கூட்டத்தைத் தாக்கி மறித்துக் கொள்ளையடித்து, கொள்ளையைத் தங்கள் குடிகளுக்கு இடையே பகுத்துக் கொண்டார்கள் என்ற செய்தி அகநானூற்றில் பதிவாகியுள்ளது.

"பொருந்தாக் கண்ணேம் புலம்பு வந்து உறுதரச்
சேக்குவம் கொல்லோ நெஞ்சே! சாத்து எறிந்து
அதர் கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்

கொடு வில் ஆடவர் படு பகை வெரீஇ" (அகம். 167 : 6-9)
"இரவுக் குறும்பு அலற நூறி நிரை பகுத்து,
இருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலை வில் ஆடவர் போல" (அகம். 97: 4-6)

அகநானூற்றின் இப்பாடல் வரிகள் வேட்டைப் பங்கீட்டின் பலநிலைகளைப் பேசுகின்றன. வேட்டையாடுதல், பங்கிடுதல், பகிர்ந்துண்ணல் பற்றி விதந்து பாடப்பட்டிருப்பது இனக்குழு வாழ்வின் சமூகக் கட்டமைப்பை வெளிப்படுத்துகிறது.

சேகரிப்பும் பாதீடும்

இனக்குழு வாழ்வில் உணவாதாரம் என்பது சமச்சீரற்ற நிலையில் இருப்பது இயல்பானது. படிமலர்ச்சிக் கோட்பாடு இதற்கான பின்புலங்களையும் வளர்ச்சி நிலைகளையும் தர்க்க ரீதியிலான காரணங்களையும் முன்வைக்கிறது. சங்க இலக்கியங்களிலும் உணவாதார வளர்ச்சி நிலையின் இரண்டாம் கட்டமான சேகரித்து பெறும் உணவுப் பண்பாடு பேசப்படுகிறது. இத்தகு உணவு அமைப்பின் வழி சமுதாயத்தின் கட்டமைப்பே மறுநிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது சேகரித்துப் பெறும் உணவு உற்பத்தியில் பெண்களே அதிகம் ஈடுபட்டனர். இதன்வழி தாய்வழிச் சமுதாய அமைப்பு நிலைபெற்றிருக்கிறது. இவ்வமைப்பின் வழி புராதன கால இனக்குழுக்குடிகள் தங்களுக்குள்ளே சமூக அரசியலில், பொருளியல் தளங்களில் தலைமையை முடிவு செய்தனர். இவ்வாறு உணவுச்சேகரித்தல் ஒரு சமூகமாற்றத்தையே உருவாக்கியிருக்கிறது. மட்டுமின்றி சேகரித்துப் பெறும் உணவு உற்பத்தியில் வேட்டையாடல் போன்று அதிக உடலுழைப்பு தேவைப்படவில்லை. இதனால் உற்பத்தி சக்திகளின் மீது மனிதனின் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினான். இதிலும் பாதீடு என்பது சமூக அறமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

உணவு சேகரித்தலில் பெண்களின் பங்கு முதன்மையாக இருந்ததால், அது பெண்களின் தலைமையை ஏற்றுக்கொண்ட சமூகமாகப் பரிணமித்திருக்கிறது. இவ்வுணவுச் சேகரித்தலில் ஆண்களின் பங்கு இருந்தாலும் அவர்கள் பெண்களின் நுண்மாண் நுழைபுலத்திறனை உணர்ந்து அவர்தம் இயல்புகளுக்கு மதிப்பளித்துள்ளமையையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாகப் புறநானூற்றுப் பாடலொன்று இதனை மிக அழகாகக் காட்டும்.

"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போலச், சிற்சில
வரிசையின் அளக்கவும் வல்லன்; உரிதினின்
காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
தூவவும் வல்லன், அவன் தூவுங் காலே" (புறம்.331: 7-13)

முல்லைச் சமூகத்தில் நிகழ்ந்த ஒரு பெண்ணின் செயலே இதில் பேசப்பட்டுள்ளது. வீட்டில் இருந்த குறைந்த அளவு தினையரிசியைச் சோறாக்கினாள் தலைவி ஒருத்தி. ஆனால் அதனை உண்பதற்காகக் காத்திருந்தோர் மிகப் பரவலாக இருந்தார்கள். ஆனாலும் அத்தலைவி உணவு உண்ண வந்திருந்த அத்தனை பேரையும் வீட்டு முற்றத்தில் இருந்த பந்தலின் கீழ் வரிசையாக அமர வைத்துத் தான் சமைத்திருந்த தினையரிசிச் சோற்றினை அனைவருக்கும் முறையாகப் பகிர்ந்தளித்தாள். அவளது பகிர்ந்தளிக்கும் உணவறத்தினையும் இனக்குழுப் பண்பினையும் வியக்கும் அப்பாடல் அவளை 'இற்பொலி மகடூஉ' என்று போற்றுகிறது. கிடைக்கும் பொருள் எதுவாயினும் எவ்வளவு குறைவாக இருப்பினும் பகிர்ந்தளித்து பகிர்ந்துண்ணும் முறையானது பெண்களுக்கு இருந்ததை பண்டைய குறிஞ்சி, முல்லைத்திணைப் பாடல்கள் வெளிக்காட்டுகின்றன. பழங்கற்காலத்தில் பெண்ணின் தலையாய கடமையாகியிருப்பது உணவு சேகரித்தலும் பகிர்ந்தளித்தலுமே ஆகும். இதற்கான உடல் வலிமையும் மனவலிமையும் அவர்களிடம் இயல்பாகவே அமைந்திருந்தது என்கிறார் ரோஸலிண்ட் மைல்ஸ்.

"வேட்டைச் சமூகக் காலத்திலேயே பெண்களின் கடமைகளில் உணவு சேகரிப்பது முதன்மையான இடத்தை வகித்தது. இந்தப் பணி அவர்களின் குலத்தை உயிர்வாழச் செய்தது. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் எந்தச் சமுதாயத்திலும் பெண்கள் தமது குழந்தைகளுடனோ அல்லது குழந்தைகள் இல்லாமலோ உணவுக்காகத் தமது வேட்டையாடும் ஆண்களைச்

சார்ந்திருக்கவில்லை" என்கிறார். (2001.8) வேட்டைச் சமூகக் காலத்தில் பெண்களிடம் தன்னுயிரை மட்டும் காத்துக் கொள்ள வேண்டும் என்ற சுயநலப்போக்கு இல்லை. மாறாக தன்னுடல் வலிமையினால் தன் கூட்டத்தின் பசியைப் போக்கி, ஆபத்தான விலங்குகள், இயற்கைச் சூழல்களிடமிருந்து தன் சுற்றத்தைக் காத்திட வேண்டுமென்ற பொதுநலப்பண்பு மேலோங்கி இருந்ததைச் சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெய் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கான நீந்தி
இரப்பர் கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கால் மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த அரும்பொருள் தரற்கே" (குறும்.331)

என்ற குறுந்தொகைப் பாடல் தொன்மைப் பொதுவுடைமையை வெளிக்காட்டுகின்றது. மனையறம் பிற்கால நீதியிலக்கியங்களில் வலியுறுத்தியது போல தொன்மைக்கால சமூக அறத்தைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இதில் உணவு சேகரிப்பு சேகரித்த உணவை முறையாகப் பாதீடு செய்தலும் மிக முக்கியமான சமூக அறமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. சேகரித்துப் பெறும் உணவுப்பட்டியலில் தேனிழைத்தல், கிழங்கு அகழ்தல், பழங்கள் கொட்டை வகைகள் சேகரித்தல் போன்றவை உள்ளன. இதில் ஆண்கள் பங்கெடுத்தாலும் பெண்களே அதிகமும் ஈடுபட்டதாகச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன.

"கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாய்ச் செல்வர்" (குறும்.233:1-2)
"வேரல்வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட!" (குறும்.182:1-2)
"புறங்குழி அகழ்ந்த தலைவன் கிழங்கினொடு
கண்ணகன் தூமணி பெறூஉம் நாடன்" (குறும்.379:1-2)
"கிழங்கு கீழ்வீழ்ந்து தேன்மேல் தூங்கிச்
சிற்சில வித்திப் பற்பல விளைந்து
தினைகிளி கடியும் பெருங்கல் நாடன்" (நற்.328:1-3)
"ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண் காழ் பெறூஉம்
கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே" (அகம்.7:20-22)

மேற்கண்ட சங்கப் பாடல்களில் இனக்குழு வாழ்க்கையின் சேகரிப்பு உணவாதார முறைகள் பேசப்பட்டுள்ளன. தேன், பலவின் சுளை, தேமாங்கனி, பல்வேறு காய்கள், பழங்கள், இலைக்கறிகள், சர்க்கரை, ஊன்சோறு, வள்ளிக் கிழங்கு, வாழை, சேப்பங்கிழங்கு, கூவைக்கிழங்கு, பலாக் கொட்டைகள், மிளகு, காடுபடு பொருட்கள் ஆகியன சேகரித்துப் பெறும் உணவுகளின் பட்டியலில் வருபவையாகும். இதில் தன்னிறைவு பெற்ற பின்பு பண்டமாற்று செய்திருக்கின்றனர். பாதீடு செய்யும் வழக்கம் கொண்ட வேடர், குறவர் முதலான குழுமக்கள் வேலிகளால் சூழப்பட்ட சீறூர்களில், குடிசைகளில் வாழ்ந்தார்கள். குறிப்பாக வில், அம்பு, வேல் முதலான வேட்டைக் கருவிகளைக் கொண்டு வேட்டையாடல், ஆநிரை கவர்தல், ஆறலைத்தல் முதலிய உணவு சேகரிக்கும் முறைகளைக் கையாண்ட வேடர்கள் கூடி உண்ணுவதற்கென்றே ஊருக்குள் சில மன்றங்கள் இருந்துள்ளன. இதனைப் 'புலம்பு கூட்டுண்ணும் புல்லென் மன்றத்து' (நற்.33:3) என்று நற்றிணை குறிப்பிடுகிறது. மருதத்திணைப் பாடல்களில் வேந்தர்களையும் சீறூர் மன்னர்களையும், வள்ளல்களையும் தேடிச் செல்லும் புலவர்களும், பாணர்களும், வழிப்போக்கர்களும், வணிகர்களும் தங்கிச் செல்லும் சாலையோர அறச்சாலைகளை இம்மன்றத்துடன் ஒப்பிட்டுக் காணமுடியும். அறத்தின் பாற்பட்ட இம்மன்றங்களில் உணவுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட செய்திகள் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளன. அதைப்போலவே போரின் போது கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களும் வழிப்போக்கர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் பாதீடு செய்யப்பட்டதற்கான சான்றுகளும் சங்கப்பாடல்களில் உள்ளன. இம்முறையானது சேகரித்த வேட்டையாடிய உணவைப் பகிர்ந்துண்ணல் என்ற சமூக

*அறத்தைப் பேணுகின்ற சமத்துவச் சமுதாயத்தின் வழக்கே வேந்தர் சமூகத்தில் போரின் போது கையகப்படுத்தப்பட்ட செல்வங்களை வீரர்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகவும் உண்டாட்டாகவும் பரிணமித்தது என்று கருதமுடிகிறது.*

*வன்புல வேளாண் உற்பத்தியும் பாதீடும்*

*குறிஞ்சி முல்லை நிலங்களில் இனக்குழுக் குடிகளாக வாழ்ந்த நிலைக்குடி மக்கள் இயற்கையாகக் கிடைத்த உணவாதாரங்களையே பெரிதும் நம்பி வாழ்ந்தனர். ஆனால் சமச்சீரற்ற இயற்கைச் சூழலில் உணவு ஆதாரம் குறையும் போது மாற்று வழிகளைத் தேடுவது இவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டது. இந்நிலையில் குறிஞ்சி முல்லை நிலங்களில் எளிய விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. உணவு உற்பத்திக்கான நிலைத்த காரணிகள் அமையாத இந்நிலங்களில் விவசாயம் செய்வது சவாலானது எனினும் பொருந்துகின்ற சூழலுக்குத் தக்கவாறு விவசாயம் இந்நிலங்களில் நடைபெற்றது. இந்நிலங்களே வன்புலங்கள் என்று அழைக்கப்பட்டன. வேட்டையும், சேகரித்தலும் மட்டுமே உணவாதாரம் என்று நிலை மெல்ல மாறத்தொடங்கியது.*

*குறிஞ்சி நிலக் குறவர்கள் காட்டை அழித்து எரியூட்டி அந்நிலத்தில் பயிர் செய்திருக்கின்றனர்.*

*“யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்*
*கரும்புமருண் முதல பைந்தாட் செந்திணை”’ (குறுந்.198:1-2)*
*“இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத*
*கரும்பு எனக் கவினிய பெருங் குரல்” (அகம்.302:9-10)*
*“இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத*
*கருங்கால் செந்தினை கடியுமுண்டென” (நற்.122:1-2)*
*“அகில் சுடு கானவன் உவல்சுடு கமழ்புகை*
*ஆடு மழை மங்கலின் மறைக்கும்” (நற்.282:7-8)*

*வன்புல நிலங்களான பகுதிகளில் தினை, மலை, நெல், கரும்பு பயிரிட்டமை குறித்த குறிப்புகள் இவ்வாறு சங்க இலக்கியங்களில் பல வரிகள் குறிப்பிடுகின்றன. காட்டை எரித்து அவ்விடத்தில் வேளாண்மை செய்வது எரிபுனச் சாகுபடி என்றழைக்கப்படுகிறது. எரிபுனக்குறவர் (புறம். 231) கானுழு குறவர் (நற்.209) ஏனல் உழவர் (பதிற். 30) என்ற தொடர்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. அதைப்போல, புனல், ஏனல் எனும் சொற்கள் மலைச் சரிவுகளில் (வன்புலம்) எரிபுனச் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நிலத்தைக் குறிக்கும். (ஸ்டீபன், ஞா., 2017 : 52) இரும்புக் கருவிகளின் துணையின்றி செய்யப்பட்ட தொடக்கநிலை வேளாண்மை இந்த வன்புல வேளாண்மையாகும். வேளாண் நிலத்தை உருவாக்க காட்டை அழித்தல் என்பது அடிப்படைப் பணியாகும். இப்பணிக்கு எரிபுனச் சாகுபடி அனுபவங்கள் துணை செய்திருக்க வேண்டும். இதுவே பின்னாளில் மருதநில உருவாக்கத்திலும் விவசாய நிலங்களில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாக்கப்பட்டிருக்கக் கூடும் என்பது அறிஞர்களின் கருத்தாக உள்ளது. (ஸ்டீபன், ஞா., 2017 : 53; பக்தவத்சல பாரதி, 2005 : 95)*

*சங்க இலக்கியங்களில் வன்புல விவசாயம் பல படிநிலைகளில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக பன்றிகள் கிழங்குகளை உண்ணக் கிளறிய இடங்களில் மனிதர்கள் வேளாண் உற்பத்தி செய்திருக்கின்றனர். இது இடமாற்று வேளாண்மை எனப்பட்டது. காரணம் இத்தகைய நிலங்கள் தற்காலிகமானது. பன்றிகள் ஒரே இடத்தில் கிழங்கைத் தேடிக் கொண்டிருக்காது. மட்டுமின்றி துவக்ககால இனக்குழு மக்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்கள். எனவே அவ்விடங்களில், தற்காலிகமாகத் தினைபயிர் செய்யும் இம்முறையை அவர்கள் கைக்கொண்டிருந்தனர்.*

*“அருவி ஆர்க்கும் கழை பயில் நனந்தலைக்*
*கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தட்*
*கொழுங் கிழங்கு மிளரக்கிண்டி, கிளையோடு*
*கடுங்கண் கேழல் உழுத பூழி*
*நல்நாள் வருபதம் நோக்கி குறவர்*
*உழாஅது வித்திய பரூஉக் குரற் சிறுதினை*
*முந்து வினையாணர் நாள் புதிது உண்மார்” (புறம்.166:1-7)*

இப்பாடலில் பன்றி கிளரிய நிலப்பகுதியில் குறவர்கள் நல்ல நாள் பார்த்துத் தினை விளைவித்த செய்தி கூறப்பட்டுள்ளது. பன்றிகள் கிளரிய இடங்களில் சிறிதளவே பயிரிட முடியும். இவ்வுற்பத்தியைக் கொண்டு ஒரு குழுவின் உணவுத்தேவையை நிறைவுசெய்ய முடியாது. ஆகவே இது தொடக்க நிலை உற்பத்தி முறையாகவே கருதமுடியும். உழவு செய்யாமல் பயிரிடும் இம்முறையும் பிற்கால வேளாண் உற்பத்திக்கு முன்னோடியான முறையாகும். இனக்குழு வாழ்க்கையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வுணவு உற்பத்தியைக் கொண்டு பகிர்ந்து கொண்டனர். குறிஞ்சியிலும் முல்லையிலும் வன்புல விவசாயத்தில் பயிரிடப்பட்ட வரகரிசி, தினையரிசி, மூங்கிலரிசி, கொள், ஐவன அரிசி ஆகியவற்றைப் பகிர்ந்தும் பண்டமாற்றும் செய்த குறிப்புகள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. இதன்மூலம் பண்டைய இனக்குழு வாழ்க்கையில் வேட்டையாடுதலும், உணவுப் பொருள் சேகரிப்பும், தொடக்க நிலை எளிய விவசாயமும் உணவைத்தரும் உற்பத்தி முறைகளாக இருந்துள்ளமை தெளிவாகிறது. இது அவர்களின் பண்பாட்டுத் தகவமைப்புகளை நெகிழ்வு கொண்டதாக மாற்றுகிறது. இவ்வுற்பத்தி முறைகளினால் அவர்கள் ஈட்டிய பொருளைப் பகிர்ந்து கொள்ளும் பகிர்வுக் கலாச்சாரம் சமூக மதிப்பைப் பெற்றிருக்கிறது புலனாகிறது.

*நிறைவுரை*

இனக்குழுச் சமுதாயப் பண்புகளில் தலையாயது பொதுவில் வைத்து உண்ணுதலாகும். இது சமூக அறமாகக் கருதப்பட்டது. சங்க இலக்கியங்கள் இதனைக் கூட்டுண்ணுதல் எனக் குறிப்பிடுகின்றன. சங்க காலம் இனக்குழு வாழ்க்கையிலிருந்து நிலவுடைமைச் சமூக மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வாழ்க்கை முறையைக் காட்டுவதாகும். அவ்வகையில் இனக்குழு வாழ்க்கை எச்சங்கள் குறிஞ்சி, முல்லை நிலங்களில் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இத்திணைகளின் முதன்மை உணவு உற்பத்தி வேட்டையாடுதல், உணவுப் பொருள் சேகரித்தல், வன்புல விவசாயம் செய்தல் என்ற மூன்றின் தன்மையில் நிகழ்ந்தன. இனக்குழுச் சமுதாயத்தின் இம்மூன்று உணவு உற்பத்தியினாலும் ஈட்டிய உணவுப்பொருட்கள் அம்மக்களால் பாதீடு செய்யப்பட்டு, பகிர்ந்துண்ணப்பட்ட செய்திகளைச் சங்கப் பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

*கட்டுரைக்கு உதவிய நூல்கள்*


1. கைலாசபதி, க., 2010, பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, வடபழநி, சென்னை - 600 026.
2. பக்தவத்சல பாரதி, 2021, சங்க காலத் தமிழர் உணவு, காலச்சுவடு பதிப்பகம், கே.பி. சாலை, நாகர்கோவில் - 629 001.
3. பக்தவத்சல பாரதி, 2019, தமிழர் மானிடவியல், அடையாளம், புத்தாநத்தம்.
4. மாதையன், பெ., 2012, சங்ககால இனக்குழு சமூதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை -600 014.
5. ராஜ்கௌதமன், 2012, பாட்டும் தொகையும் தொல்காப்பியமும தமிழ்ச் சமூக உருவாக்கியமும், தமிழினி, அண்ணாசாலை, சென்னை - 2.
6. ராஜன், கா., 2004, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
7. ரோஸலிண்ட் மைல்ஸ், வி. ராதாகிருஷ்ணன் (தமிழில்) 2001, உலக வரலாற்றில் பெண்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.
8. ஸ்டீபன், ஞா., 2017, இலக்கிய இனவரைவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.


********* ********* ********** ********* ********* ********** ********** **********